**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ஆம் தேதி வியாழக்கிழமை**

**இ.ம.எண்.2/2023 இன்**

**இ.ம.எண்.1/2022 இன்**

**அ.வ.எண்.225/2022**

P.சக்திவேல், வயது 66, த/பெ.பழனியப்பன்,
க.எண்.27–A, சின்ன ஆண்டார் தெரு, குளித்தலை,
கரூர் மாவட்டம். ...மனுதாரர்/
உரிமை கோருபவர்/
3–ம் நபர்

/எதிர் /

P.யோகநாதன், வயது 41, த/பெ.பெரியசாமி,
கீழக்குட்டப்பட்டி, வைகைநல்லூர் கிராமம், குளித்தலை தாலூகா,
கரூர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்/
வாதி

K.வாசு, வயது 66, த/பெ.கந்தசாமி
V.கார்த்திக், வயது 36, த/பெ.வாசு
மேற்படியார்களின் விலாசம், க.எண்.15, சுயராஜ்ய தெரு,
குளித்தலை தாலூகா மற்றும் டவுன்,
கரூர் மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்/
2, 3 பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனுவானது கட்டளை 38 விதி 8, 10 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன் படி, எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள 2–வது இலக்க சொத்தைப் பொறுத்து கடந்த 03.08.2022–ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட பற்றுகையை நீக்கம் செய்யக்கோரி மனுதாரர்/மூன்றாம் நபரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 08.09.2023 |
| செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் | | ரூ.20/- |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 25.08.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 28.08.2025 |
| மனுதாரருக்காக | : | திரு.M.தமிழ்ச்செல்வன் – வழக்கறிஞர் |
| முதல் எதிர்மனுதாரருக்காக | : | திரு.S.சுதாகர் – வழக்கறிஞர் |
| இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்களுக்காக | : | R.M.செந்தில் – வழக்கறிஞர் |

**தீர்ப்பாணை**

1). இம்மனுவானது அனுமதித்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

2). செலவுத் தொகை இல்லை.

3) கடந்த 03.08.2022-ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள சொத்துக்களை பற்றுகை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில், கடந்த 16.08.2022-ம் தேதி பற்றுகை செய்யப்பட்ட நிலையில், மேற்படி இ.ம.எண்.1/2022 மனுவில் கண்ட இரண்டாவது இலக்க சொத்தை பொறுத்து மட்டும் பற்றுகையை ரத்து செய்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

4) மேற்படி பற்றுகையை ரத்து செய்ய படி செலுத்த 5 நாட்கள் கால அவகாசம். அழைக்க வாய்தா : **08.10.2025**

**Description of Property***

**Item No.2**

The Properties are situated in the village of kulithalai in kulithalai Town and Taluk, karur district in Ayan Punja S.F.No.57/8C 1, new T.S.No.60/2 an extent of measuring North-South on both sides 30 feet. East-West on the North 58 ft. and East-West on the South 60 feet, in which, totoal extent of 1770 sq.ft. vacant site situates within the following boundaries:

East of 10 feet breadth of Pathway, West of Mariyamman kovil kannaru and North-South pathway, South of Balasubramanian - now sudhakar site; and North of Sathyabama vacant site.

கரூர் மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை சார்பதிவகம், குளித்தலை கிராமம், பழைய கோர்ட் தெருவில் அ.பு.சர்வே எண்.57/8C1 ஏக்கர் 0.41 செண்டில் பழைய கோர்ட் தெரு, கிழமேல் வீதியிலிருந்து, தென்வடலாக எங்களால் விடப்பட்டுள்ள 10 அடி அகல தென்வடல் பொது பாதைக்கு கிழக்கு, பாலு வகையறா வீட்டிற்கு தெற்கு, மாரியம்மன் கோவில் கண்ணாறுக்கும் தென்வடல் பாதைக்கும் மேற்கு, எங்கள் மீதி மனைக்கு வடக்கு இதற்குட்பட்ட தென்வடல் மேல்புறம் 26 அடி கீழ்புறம் 26 கிழமேல் வடபுரம் 69 அடி தென்புறம் 78 அடி அளவுள்ள 1911 சதுரடி (4.38 செண்ட்) காலிமனை, மேற்படி பாதை பாத்தியம் உண்டு.

*(இ.ம.எண்.6/2025 நாள் : 25.06.2025 உத்தரவுப்படி சொத்து விபரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

**ஒப்பம்/- (ஈ.முத்துசாமி)**
சார்பு நீதிபதி,
குளித்தலை.